மாசித்திங்கண் மாசின சின்னத் துணிமுள்ளின்
ஊசித்துன்ன மூசிய ஆடையுடையாக சீவக. 2929

உடுத்துங் களைந்த நின் பீதக வாடையுடுத்து
நாலா. திவ். பெரி. திருப். 9

வல்லி நுண்ணிதழன்ன வாடை கொண்டு
நாலா. திவ். பெரி. திருப். 3-4:2

ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு ஆண். திருப். 27

பீதகவாடை மூடி பூண் முதலா
மேதகு பல்கலன் அணிந்து நம்மா. திருவா. 1

படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நம்மா.திருவாய்.3:1:1

உடையார்ந்த வாடையன் கண்டிகையனுடை நாணினன்
நம்மா. திருவாய். 3:7:4

எண்ணில் பல்கலன்களும் ஏலுமாடையுமஃதே
நம்மா. திருவாய். 4:3:5

திருமார்பு வாய் கண் கை உந்தி காலுடை
யாடைகள் செய்ய பிரான் நம்மா. திருவாய். 8:9:1

பொன்னொத்த வாடை பெரு. திரு. மொழி. 6:5

பொன்னிற வாடையைக் கையில் தாங்கி பெரு. திரு. மொழி 6:8

பொங்கிளவாடை யரையில் சாத்தி பெரு. திரு. மொழி. 6:9

பின்னல் துலங்கு மரசிலையும் பீதகச் சிற்றாடை யொடும்
பெரி. திரு. மொழி. 1:7:3

சிற்றாடையும் சிறுப்பத்திரமும், இவை கட்டிலின்
மேல்வைத்துப் போய் பெரி. திருமொழி. 3:3:5

கட்டி நன்குடுத்த பீதக வாடை பெரி. திருமொழி. 3:6:10

செய்ய நூலின் சிற்றாடை செப்பனுடுக்கவும் வல்லள் அல்லள்
பெரி. திருமொழி. 3:7:1

பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து
பெரி. திருமொழி. 5:2:8

சக்கரமும் தடக்கைகளும் கண்களும் பீதக வாடையொடும்
செக்கர் நிறத்துச் சிலப்புடையாய் பெரி. திருமொழி. 5:3:7

சிவந்த வாடையின்மேல் சென்றதாம் என் சிந்தனையே
திருப்பான். அமலன். 2

அந்தி நிறத் தாடையும் திருப்பான். அமலன். 3

பெண்ணின் வருத்த மறியாத பெருமாள் அரையில் பீதக
வண்ண வாடை கொண்டு என்னை வாட்டம் தணிய வீசிறே
நாச்சி-திரு. 3:1

பீதகவாடை யுடைதாழப் பெருங்கார் மேக்க் கன்றேபோல்
நாச்சி-திரு. 4:5

வெளிய சங்கொன்றுடையானைப் பீதக உடையுடையானை
நாச்சி-திரு. 4:8

துவரியாடையார் மட்டையர் சமண்தொண்டர்கள்
நாச்சி-திரு. 2:1:6

காசையாடை மூடி யோடிக் காதல் செய்தான்
பெரிய. திருமொழி. 2:2:1

சேவடி கை திருவடிவாய் கண் சிவந்தஆடை
பெரிய. திருமொழி. 2:10:9

பவ்வநீருடை வாடையாகச் சுற்றி பெரிய. திருமொழி. 2:1:6

பொங்கு புணரிக் கடல் சூழாடை நிலமாமகள்
பெரிய. திருமொழி. 6:10:9

துவராடையுடுத்து ஒருசெண்டு சிலுப்பி பெரிய.திருமொழி.10:8:2

பொன்னின்மாமதிட்கு உடுத்த நீல ஆடை போலுமே கம்ப. 113

ஓதம் நெடும் கடல் ஆடை உலகினில் வாழ் கம்ப. 217

உடுத்த நீராடையள் உருவச் செவ்வியள் கம்ப. ஆரணிய 238

வண்ணமணி ஆடையுள மற்றும் உள பெற்றேன் கம்ப. 4690

அஞ்சுவணத்தினாடை யுடுத்தாள் கம்ப. சுந்தர 174

அண்ணன் வேலிராவணன் அரத்தவாடையன் கம்ப சுந்தர 369

எழு முகில் ஆடையா அகன்,
பந்தர் ஒத்தது நெடும் பரிதி வானமே கம்ப. 6815

மாமதில் ஆடை இலங்கையாள் கம்ப. 7182

நெய் கொள் சோரி நிறைந்த நெடுங்கடல்
செய்ய ஆடையள் அன்ன செஞ்சாந்தினள் கம்ப. 9571

பிறவும் ஆடையும் சாந்தமும் கம்ப. 9759

கொய்யுளைப் புரவி, திண்தேர் குஞ்சரம் ஆடை
இன்ன, மெய் உறக் கொடுத்த பின்னர் கம்ப. 10511

ஆடை கைத்தலத் தொருத்தி கொண்டது சூளா. 467

அருமணிக் கலங்களும் அரத்தவாடையும் சூளா. 1722

மணியும் பொன்னும் நல் ஆடையும் மற்றும் என்செய்ய
பெரிய. அமர். 29

அந்தரத்தமரர் போற்றும் அணிகிளர் ஆடைசாத்தி
சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவைசாத்தி
பெரிய. தடுத். 184

அரையிற் சரணத் துரி ஆடையின் மீது பௌவத்
திரையிற்படு வெள்ளலகார்த்து விளிம்புசேர்த்தி
பெரிய. கண்ணப்ப. 61

யாப்புறு மென் சிறு மணி மேகலை யணி
சிற்றாடையுடன் பெரிய. மானக். 13

ஆடைவீசி இருவிசும்பின் வெளிதூர்த்தார் பெரிய திருஞான. 259

சாலுமெய்க் கலன்கள் கூடச் சாத்தும் பூண்ஆடை வர்க்கம்
பெரிய. சாக்கிய. 12

பாலன பிறவும் ஏந்தும் பரிசளம் முன்பு செல்ல பெரிய ஏயர். 377

துவராடை படம் புனைவேடம் தவிரார் பசுபதியார்
பெரிய. சாக்கிய. 12

அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடைசாந்தம் அடற்பரிமா
பைம்பொற் சுரிகை முதலான பெற்று பெரிய. கழறிற்-63

ஆரம் நறுமென் கலவை மான்மதச் சாந்தாடை அணிமணிப்பூண்
சார எடுத்து வன்றொண்டர் சாத்தி பெரிய. கழறிற்-153

எழுந்திரை மாகடலாடை இருநில மாமகள் மார்பில்
பெரிய. இடங்கழி-1

ஈரணி

மகளிர் ஈரணி புலர்த்தர, வையை நினக்கு மடை
வாய்த்தன்று பரி. 11:8-67

ஈர்ந்தணி ஆடையை எல்லி மாலையை கலித்; குறிஞ். 16

ஈரணி சிதையாதெம் இல்வந்து நின்றதை மரு. 1

ஈரணிக் கேற்ற ஒடியாப் படிவத்து மரு. 93

வதுவை ஈரணிப் பொலிந்த நம்மோடு அகம். 166

இணர் துணை மகளிரொடு ஈரணி அகம். 266

இளையரும் ஈர்ங்கட்கு அயர வுளையணிந்து கார். நாற்பது- 22

நீரணி கொண்ட ஈரணி நீக்கி — பெருங். 1.42.143

ஈரணிப் பள்ளிப் புக்கருவினான் — சீவக. 373

## உடுக்கை

மரனார் உடுக்கை மலையுறை குறவர் — நற். 64

குன்றி யேய்க்கும் உடுக்கை — குறுந். கடவுள் வாழ்த்து

எரிதிரிந்தன்ன பொன்புனை யுடுக்கை — பரி. 1

புதையிருள் உடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு — பரி. 2

மாஅய் மெய்யோடு முரணிய உடுக்கையை — பரி. 4

பொன்புனையுடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே — பரி. 15

இரும்புலி வேங்கைக் கருந் தோலன்ன
கல்லெடுத்தெறிந்த பல்கிழியுடுக்கை — அகம். 285

மாசுணுடுக்கை மடிவாயிடையன் — புறம். 54

மாசொடு குறைந்த உடுக்கையள் — புறம். 159

உடுக்கையுலறி உடம்பழிந்த கண்ணும்
குடிபிறப்பாளர் தம்கொள்கையிற் குன்றார் — நாலடி. 141

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு — குறள். 788

உடுக்கை யிகவார் — ஆசாரக். 75

உண்டி உறையுள் உடுக்கை யிவை ஈந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று — ஏலாதி. 9

உடுக்கை மருந்துறையுள்
கொடுத்து குறைத் தீர்த்தலாற்றி — பழமொழி. 338

புன்மயிர் சடைமுடிப் புலரா உடுக்கை — சிலப். 25. 126

சாரார் வரைக் கொங்கை கண்ணார் கடலுடுக்கை
நாலா. திவ். திருமன். சிறிய திருமடல் பாடல்வரி-1

பொருவிடையேழ் அடர்த்துகந்த, கரையினார்
துவருடுக்கை கடையாவின் கழிகோல் கை
நாலா. திவ். திருவாய். 4.8.4

## உடுப்பு

தொடுத்த மணிக்கோவை யுடுப்பொடுத் துயல்வர — மணி. 3:140

**உடை**

உடைபெயர்த்துடுத்தலொடு, கெழீஇய நான்கே
தொல். மெய்ப். 14

உருகெழு யானை உடை கொண்டன்ன
தகர் பிணியவிழ்ந்த தாழை வன்புதர் நற். 299

பொன் ஒக்கும் உடையவை பரி. 1.56

பாலன்ன மேனியான் அணிபெறத்தைஇய
நீல நீருடை போல கலித். 124

பாவை தண்நறு மூகையொடு வெண்ணூல் சூட்டித்
தூஉடைப் பொலிந்து புறம். 136

தொன்றுபடுத்துளையொடு பருவிழைபோகி
நைந்து கரை பறைந்த என்னுடையும் நோக்கி புறம். 376

வேறுபட்ட உடையும் சேறுபட்ட தசும்பும் புறம். 377

முது நீர்ப்பாசியன்ன உடைகளைந்து புறம். 390

புகை முகந்தன்ன மாசில் தூஉடை திருமுருகு. 138

சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவுடை பெரும். 74

மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை முல்லை. 59

உடைசெல்வம் ஊணொளி கல்வி என்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின் குறள். 939

ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர்ச் சிறப்பு குறள். 1012

உடை நடை சொற் சோர்வு வைதல்
...குடிமைக்குத் தக்க செயல் ஆசாரக். 49

உடையிட்டார் அணுகாரே செவ்வகைச்
சேவகர் சென்று சிறு. மூலம். 61

பொன்னிறம் கொண்ட உடையினன் சிலப். 22.67

சடையினர் உடையினர் சாம்பற்பூச்சினர் சிலப். 26.25

நாணமு முடையும் நன்கனம் நீத்து மணி. 3.88

ததர் வீழ்ப் பொடித்துக் கட்டிய வுடையினன் மணி. 3.107

மரவுரியுடையன் விருச்சிகன் என்போன் மணி. 17.2

மரவுரியுடையன் சீவக. 1213

பூப்புடை அணிந்த பொய்கை மணி. 2772

உயிரைமதம் செய்யும் மதுத் தண்டொடுடை ஆடை சீவக. 1874

உடையும் கடியன ஊன்று வெம்பரற்களுளை நாலா. திவ். பெரி. திரு. 3:2:9

உண்டியே உடையே உகந்தோடும்
இம்மண்டலத் தொடும் கூடுவதில்லை யான் நாலா. திவ். 3:4

உடைமாடு கொண்டான் உங்களுக்கினி யொன்று
போதுமே நாலா. திவ். 10:7

வியமுடை விடையினம் உடைதர மடமகள்
குயமிடை தடவுரை அகலமதுடையவர் நாலா. திவ். 7-1

மின்னை, உடையாகக் கொண்டு அன்றுலகளந்தான் குன்றம்
குடையாக ஆகாத்த கோ பேயாழ். 3.41

செய்யவுடையுந் திருமுகமும்
செங்கனிவாயும் குழலும் கண்டு பெரு. திரு. 6.7

துவரித்த உடையவர்க்கும் தூய்மையில்லாச் சமணர்க்கும்
செவ்வரத்த வுடையாடை அதன் மேலோர் பெரிய. திருமொழி 5.6.8

சிவளிகைக் கச்சென்கின்றாளால் பெரிய. திருமொழி 8:1:7
திருச் செய்யக் கமல வுந்தியும் செய்யகமலை மார்பும்
செய்ய வுடையும் திருவாய். 8:4.7

தாமரைக் கண்ணும் வாயும் கைகளும் பீதக
உடையும் காட்டி திருவாய். 10:3:8

உடையுயிர் யாவையும் உடையுமாலென்றான் கம்ப.ஆரணிய.242

சரியுடைச் சுடர்சாய்நிலம் சாய்வுற சாத்தி கம்ப. 9790

அங்கையினயிற் படையர் ஆணுடையர் சூளா. 861

மேயுடை அணிந்த கணி வேளையிது என்றான் சூளா. 1098

பேரொளிப் பீதக வுடையர் சூளா. 1879

கந்தை கீளுடை கோவணம் கருத்தறிந்துதவி பெரிய. அமர். 3

ஊணும் மேன்மையில் ஊட்டி நற்கந்தைகீள் உடைகள்
யாணர் வெண்கிழிக்கோவணம் ஈதம் கேட்டும்மைக்
காணவந்தனம் பெரிய. அமர். 11

முன்பு தாம் கொடுக்கும் கந்தை கீளுடை
கோவணம் அன்றி பெரிய. அமர். 16

சேர்வு பெறக் கச்சில் செறிந்த வுடை மேல்வீக்கி
வார் கழலுங் கட்டி வடிவாட் பலகை கொடு
போர் முனையில் ஏலாதி. 11

அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடை
வன்தோலார் கண்ணப்ப. 7

உடைதோலும் சுரிகையுங் கைக் கொடுத்தான்
அன்றே கண்ணப்ப. 53

முறைமை தந்த முதற்சுரிகை உடைதோலும்
வாங்கிக் கொண்டு கண்ணப்ப. 54

பாயுடைப் பாதகத்தோர் திருமடப்பாங்கு
செய்ததீவினை திருஞான. 724

உரியுடைக் கையர் பாயின் உடுக்கையர் திருஞான. 766

உடை ஒழிந்தொரு பேச்சிடையிடையின்றி நின்
றுண்டோர் திருநாவு. 85

கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறி உடை
புனைந்து ஏயர். 300

**உத்தரியம்**

உத்தியொரு காழ்நூலுத்தரியத் திண்பிடி
நேர்மணி முக்காழ்ப் பல்பல கண்டிகை கலித். மரு. 96

நாணுத்தரீகம் தாங்கி பெருங். 4.16:40

இட்டவுத்தரியம் மெல்லென்றிடை சுவல் வருத்த
வொல்கி சீவக. 472

இட்டவுத்தரியம் மின்னும் எரிமணி...வருமுலை
தாங்கலாற்றா சீவக. 835

அந்நுண்டுகிற் கல்லரத்த மல்குலது வருத்த சீவக. 1783

உண்டுயிர் சிலர்கண் வாழ்கென்றுத்தராசங்கம்
வைத்தார் சீவக. 2457

உத்தரியப்பட்டாட ஆடாமோ ஊசல் நந்திக். 29

உத்தராசங்கம் இட்டு ஒளிக்கும் கூற்றமே கம்ப. 832

மோந்திட நறுமலர் ஆய; மொய்ம்பினில்
ஏந்திட உத்தரியத்தை ஏய்ந்தன கம்ப. 4011

திருவின் நாயகன் இவன் எனத் தேமரைத் தெரிக்கும்
ஒருவன் மார்பினின் உத்தரியத்தினை ஒத்த கம்ப. 4294

அடுத்த நீர் ஒழிந்தன அருவி தூங்கின
எடுத்த நூல் உத்திரியத் தொடு எய்தி நின்று
உடுத்த வால் நிறத் துகில் ஒழிந்த போன்றவே — கம்ப. 4359

ஓயா அருவித் திரள் உத்திரியத்தைஒப்பத் — கம்ம. சுந்தர. 41

உத்தரீயங்களும் சரிய வோடுவர் — கம்ம. சுந்தர. 146

அஞ்சு வணத்தினுத்தரியத்தாள லையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிராரத்தண் கொண்டாள்
கம்ப. சுந்தர. 174

நீத்த வெள்ளருவியினி மிர்ந்த
பானிறப்பட்டு யுத்தரியம் பசப்புற — கம்ப. சுந்தர. 411

உழைபுகு செப்பின் ஒளிதர மறைத்த
உத்தரீயத்தினர் ஒல்கி — கம்ப. சுந்தர. 421

கோசிகத்தினிலுற்ற கொழுங்கனல்
தூசினுத்தரி கத்தொடும் சுற்றுறா — கம்ப. சுந்தர. 1205

சுத்தி வீழும் அருவித்திரள் சாலும்
உத்தரீகம் நெடுமார்பின் உலாவ — கம்ப. சுந்தர. 6991

ஊசல் நீங்கினர் உத்தரிகத் தொடுதூசு வீசினர்கம்ப.சுந்தர. 8262

மீது புனை உத்தரிய வெண் துகில் நுடங்க — பெரிய. தடுத். 30

யார்க்கும் மிக்கான் மிசையுத்தரியத் துகில்
தாங்கி மேற்சென்று — பெரிய. தடுத். 39

பொன்னாரும் உத்தரியம் புரிமுந்நூல் அணிமார்பர்
பெரிய. தடுத். 117

தா மறுவை உத்தரியந் தனிவிசும்பில் எறிந்து ஆர்க்கும்
தன்மையாலே பெரிய. திருஞான. 95

நற்றிரு உத்தரீய நறுந்துகில் சாத்தி — பெரிய. திருஞான. 1209

உத்தரிய வெயிலுந்திய வெண்பட்டதன்மேல்
விரித்துப் பள்ளி மேவினார் — பெரிய. ஏயர். 49

மறையோரெல்லாம் உத்தரியம், விண்ணில்
ஏறவிட்டார்த்தார் — வெள்ளானைச். 13

**ஒலியல்**

உடையும் ஒலியலும் செய்யை — பரி. 19. 97

உடைக்கியைந்த வொலியற்றாலூன்
றருவார்க்குணர்த்துமால் — நீல. 173

**கச்சம்**

கச்சம் தின்ற சழல் தயங்கு திருந்து அடி — மது. 436

**கச்சு**

பெருங்கச்சு நிறீஇ — நற். 220

தண்பணி வைகிய வரிக் கச்சினனே — ஐங். 206

கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன் — அகம். 76

கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
……… புனையைந்தாடும் அத்தி — அகம். 376

பொருகணைத் தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவு வரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பின் பூண்டு புடைதூங்க — பெரும். 70-72

இரவு பகற் செய்யும் திண்பிடி வொள்வாள்
விரவு வரிக் கச்சின் பூண்ட மங்கையர் — முல்லை. 46-47

நிறங்க வர்பு புனைந்த நீலக் கச்சினர் — மதுரை. 639

துளை யெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி — சிலப். 12.59-60

கச்சினர் கண்ணியர் கதிர் வெள் வளையினர் — பெருங். 1.34:121

கண்ணியும் கழங்கும் கதிர் முலைக் கச்சும் — பெருங். 1.34:162

கச்சி யாப்புறுத்த கால் வீங்கின முலை — பெருங். 1.34.202

வட்டிகைப் பலகையும் வருமுலைக் கச்சும் — பெருங். 1.38:169

இலைப் பூண் கவைஇய எழுது கொடி ஆகத்து
முலைக் கச்சிளமுலை முகத்திடையப்பி — பெருங். 1.40:143-44

சித்திரப் பிணையலும் பத்திரச் சுரிகையும்
பத்திக் கச்சினொடு ஒத்தவை பிறவும் — பெருங். 2.5:143-44

கச்சுப் பிணியுறுத்துக் கண்டகம் பூண்ட — பெருங். 3.5:108

வெண்பூந்துகிலும் செம்பூங்கச்சும்
சுரிகையும் வாளும் உருவொடு
புணர்ந்த அணியினராகி — பெருங். 3.17:127-29

பன்மணித் தாலியும் மென்முலைக் கச்சும்
உத்திப் பூணும் உளப்படப் பிறவும் — பெருங். 3.17:165-66

அரை விரித்தசைத்த அம்பூங் கச்சொடு
போர்ப்புறு மிக்கோள் யாப்புறுத்தசைஇ — பெருங். 3.17:171-2

பெரும்புறத் திட்ட கருங்கச் சீர்ப்பினர் — பெருங். 3:20-3

கலாவப் பல்காழ் கச்சு விரிந்திலங்க — பெருங். 5.1:138

கண்ணியன் கழலினன் கச்சினன் தாரினக — பெருங். 5.4:76

தேங்காத மன்னர் திரிதோளிணைச் சிக்க யாத்த
பூங்கச்சு நீக்கி பொறி மாண்கல நல்லசேர்த்தி — சீவக. பதி. 16

கச்சுலா முலையினார்ச் கணக்காகிய
சச்சந்தன் என்னும் தாமரைச் செங்கணான் — சீவக. 157

வெங்கட் கதிர் முலைக் கச்சின் வீக்கி — சீவக. 459

கால்பரந்திருந்த வெங்கட் கதிர்முலைக் கச்சின் வீக்கி. — சீவக. 541

வட்டச் சூரையர் வார்முலைக் கச்சினர் — சீவக. 632

சுரிகை அம்பூங் கச்சிடைக் கோத்து வாங்கி — சீவக. 698

முகிழ் முலைக் கச்சின் வீக்கி — சீவக. 971

வண்ணப் பொற் கடகமேற்றா வார்கச்சிற் றானை
வீக்கா — சீவக. 978

பொற்கச்சார்ந்த பூணணி பொம்மன் முலையாளை — சீவக. 1060

கழலுடை யிளையவர் கச்சின் வீக்கலின் — சீவக. 1092

வரிக்கச்சில் பிணிக்கப்பட்டான் மன்னனால் என்ன — சீவக. 1133

கச்சற நிமிர்ந்து மாந்தர்க் கடாவிடு களிறுபோல் — சீவக. 1153

கவள யானையினுதற்ற வழுங் கச்சொத்தவே
கச்சு விரித்து யாத்த கதிர் முலையர் மணியயில்வாள் — சீவக. 2015

சருங்கணிளமுலை கச்சற வீக்கி மருங்குல் தளர — சீவக. 2116

பெரும் புறத் தலமரப் பிணித்த கச்சினர் — சீவக. 2224

கச்சொடு பொற் சுரிகை காம்பு கனகவளை — நாலா. திவ்.
பெரி. திரு 1:2:8

செங்கச்சு கொண்டு கண்ணாடையார்த்து — நாலா. நாச்சி.
திரு. 2:4

தாஞ்ஒண்ட கச்சின் தகையுண்ட முலைக் கண்மீது
வாஞ்ஒண்ட கண் நீர் மழையுண்டெள வாரநின்றாள் — கம்ப. 988

முலைமிசைக் கச்சொடு கலையும் மூட்டு அற — கம்ப. 1070

அலம் வரு நிழல் உமிழ் அம்பொன் கச்சினால் — கம்ப. 1308

சுற்று ஆர்ந்த கச்சில் சுரிகை புடைதோன்ற ஆர்த்து — கம்ப. 1809

கொள்ளுபே வு திசையானையின் மணிக் குலமுடைக்
கற்றை மாகணம் விரித்து வரிக்கச்சொளிரவே — கம்ப. ஆரணிய. 15

கச்சும் வாளும் தம் காறொடர்ந்து ஈர்ப்பன காணார்
அச்ச மென்பதொன்றுருவு கொண்டால் எனவழிவார்
கம்ப. ஆரணிய. 501

சிந்து ராகத்தின் செறிதுயில் கச்சொடு செறிய சுந்தர. 1085

வாள் வலம்பட மந்தரம் சூழ்ந்த மாசுணத்தின்
தான் வலந்து ஒளிர் தமனியக் கச்சொடும் சார்த்தி கம்ப. 9787

பொன்றுன்னிய உடையினர் துதைந்த கச்சினர்
... ... ... ... ... ... ... ... ...
அன்னவர் அடிமுதல் காவன் நண்ணினார் சூளா. 83

வண்டினம் பாடு மாலையன் வரித்த கச்சினன் சூளா. 1319

உருவிய வாளினன் உடுத்த கச்சினன் சூளா. 1380

கஞ்சுசு முகத்த முலைகச்சு மிக வீக்கி சூளா. 1796

கச்சது கடிந்தே கல். 45-4

ஆர்கொல் பொர அழைத்தார் என்றறியேற்றிற் கிளர்ந்து
சேர்வு பெறக் கச்சில் செறிந்த வுடைமேல்
வீக்கி பெரிய. ஏனாதி. 11

**கச்சை**

அரைச் செறி கச்சை யாப்பழித்தசைஇ நற். முல். 21

நீலக் கச்சைப் பூவாராடை பீலிக் கண்ணிப் பெருந்தகை
மறவன் புறம். 274

காவெரியூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரிக் கச்சைப் புகழோன் தன்முன் சிறு. 238-39

வண்ணவரி வில்லேந்தி அம்பு தெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி குறிஞ். 124-25

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி சிலப். 5:141-2

விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தரக்
கச்சை யானைக் காவலர் நடுங்க சிலப். 26:230-31

முரசம், கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி மணி. 1:28

பொற்கச்சற வீசிக் கதிந்தெழுந்த தனம் தஞ்சை. 235

கையார் கடகத்துக் கதிர் வாட்கச்சையர் பெருங். 1.37:7

| | |
|---|---|
| செம் பொற் கச்சையர் | பெருங். 1.39:31 |
| வரிக் குப்பாயத்து வார் பொற்கச்சையர் | பெருங். 1.40:378 |
| மட்டப் பூந்துகிற் கட்டளைக் கச்சையர் | பெருங். 1.4:198 |
| செறிமென் கச்சை சேர்ந்த அல்குலர் | பெருங். 1.43:126 |
| வீக்கிய கச்சையர் | பெருங். 1.46:18 |
| உற்றோனுற்ற உறுகண் டீர்க்கென<br>கற்றோய் கலிங்கம் கட்டிய கச்சையன் | பெருங். 1.46:96-7 |
| திண்மை செறிவில் சேடக மகளிர்<br>தன்மை கடுக்குந் தானைக் கச்சையர் | பெருங். 1.46:242-43 |
| வாடாத் தாரினர் சேடார் கச்சையர் | பெருங். 2.6:124 |
| குறுக்கை புக்க கொளுவமை கச்சையன் | பெருங். 2.18:18 |
| நீலக் கச்சை நிறைகழல் மறவரை | பெருங். 3.17:237 |
| தேனெறி குன்ற மொத்த திண் கச்சை துணிந்த<br>வேழம் | சீவக. 800 |
| கழலன் காழகம் வீக்கிய கச்சையன் | சீவக. 939 |
| கச்சையும் வீக்கினன் கறங்கிரு மணி அணிந்து | சீவக. 1836 |
| கச்சையங் கடகரி கழுத்தின் கண்உற | கம்ப. 1424 |
| ஆயிடை வெஞ்சுடர் வாளினர் விசித்த கச்சையர் | சூளா. 92 |
| கச்சை யானை மானவேற் கண்ணிலங்கு தாரினான் | சூளா. 139 |
| மெய்யிலங் குறையினர் விசித்த கச்சையர் | சூளா. 376 |
| வரிந்த கச்சைய னொருவன் வந்து வண்டு<br>இரிந்து பாய | சூளா. 583 |
| மணித் தொடர் மருங்கின் வீழ்த்து<br>வரிபுரிக் கச்சை வீக்கி | சூளா. 913 |
| கட்டிய கழலார் தாழ்ந்த கச்சையர் கனலும்<br>வாளர் | சூளா. 916 |
| கச்சையங் களிநல் யானை காவலன் கனன்று<br>சொன்னான் | சூளா. 1157 |
| கச்சையங் கவிற் றோடேனைக் கவனமா<br>வலத்தினாலும் | சூளா. 1189 |

அச்சுவக் கிரீவனுக்கு இளைய காளையர்
கச்சையங் கருங்களி யானை வல்லவர் சூளா. 1260

கைவலப் படையர் கழலர் கச்சையர் சூளா. 1270

கச்சையர் கருங்கழலர் காலனையு நோனார் சூளா. 1279

வரிந்துவீழ் கச்சையின் வளைந்த தாடியன் சூளா. 1420

**கஞ்சுகம்**

கஞ்சுக முதல்வர் ஈரைந் நூற்றுவர் சிலப். 27:188

நீலன் முதலிய கஞ்சுக மாக்கள் சிலப். 28:80

கஞ்சயன் முதலாத் தலைக் கீடு பெற்ற
கஞ்சுக முதல்வர் ஈரைந் நூற்றுவரும் சிலப். 26:137-38

கஞ்சுக மாக்கள் எஞ்சா நாவினர் சிலப். 26:166-67

காவலற் றொழுது கஞ்சுகனுரைப்போன் மணி. 25:11

கைதொழுதிறைஞ்சி கஞ்சுகன் உரைப்போன் மணி. 28:178

காவன் மாக்களும் காஞ்சுகி முதியரும் பெருங். 1.44:111

காஞ்சுகி முதியர் பெருங். 1.46:318

காஞ்சுகி முதியர் பெருங். 1.47:167

அச்சுறு நோக்கினறுபது கழிந்த
கஞ்சுகி மாக்கள் சோர்ந்து புடைகாப்ப பெருங். 3.5:109-10

நண்பிற் றிரியாது பண்பொடு புணர்ந்த
காஞ்சுகி மாந்தரும் தாம் சென்று தருகென பெருங். 4.15:145-6

காஞ்சுகி மாந்தர்க்கு ஓம்படை கூறி பெருங். 4.16:45

பாதக இருள் செய் கஞ்சுகமும் பற்றலால்
சாதகர் என்னவும் தகைத்து அம்மாலையே கம்ப. 626

தாழ்ந்து விரிந்த கஞ்சுகத்து மெய்யார் கம்ப. 880

கற்றைச் சுடர் விட்டெரி கஞ்சுகியான் கம்ப. ஆரணிய. 83

மின்னுடை வேத்திரக் கையர் மெய்புகத்
துன்னிடு கஞ்சுகத் துகிலர் கம்ப. ஆரணிய. 569

முற்றும் மூடிய கஞ்சுகன் மூட்டிய
வெற்று அனல் பொழி கண்ணினன் கம்ப. ஆரணிய. 6926

நஞ்சு கக்கி எரி கண்ணினர் நாமக்
கஞ்சுகத்தர் சுதை பற்றிய கையர் கம்ப. 7000

கஞ்சுகி அயல் நின்றானை, ஈண்டு நம் தூதர்தம்மை கம்ப. 7404
கஞ்சுகியவர் கண்மெய் காவல் ஓம்பினார் சூளா. 92

தொண்டை தொலைவித்தத் துவர்வாய் மகளிர் சூழக்
கண்டு வளர் தாயரொடு கஞ்சுகியவர் காப்ப சூளா. 867

கஞ்சுகி மாந்தரும் காவன் முதியரும் சூளா. 1648

விஞ்சையர் மடந்தையர் விளங்கு மேனியர்
கஞ்சுகி அவரொடு மிழிந்து சூளா. 1276

கஞ்சுக முகத்த முலைக்கச்சு மிக வீக்கி சூளா. 1796

அரசனுக்கு வெப்படுத்தது என்றருகு கஞ்சுகிகள்
உரைசெயப் பதைத்து ஒருதனித் தேவியர் புகுத
பெரிய. திருஞான. 710

ஆம்பவளத் திருமேனிக் கஞ்சுகத்தின் அணிவிளங்க சிறுத். 31

**கம்பல்**

திருத்தறைந்த தலையுந் தன் கம்பலும் கலித். 65

**கம்பலம்**

கம்பலத்தன்ன மைம்பயிர்த்தா நற். 24

கடிமலர் மாலை நாற்றிக் கம்பல விதானம் கோலி சீவக. 837

சேண் குலாம் கம்பலம் செய்ய தொன்றனால்
மாண் குலாங் குணத்தினாள் மறைத் திட்டாளரோ சீவக. 2233

செந் நெருப்புணுஞ் செவ்வெலிம் மயிர்
அந் நெருப்பளவாய் பொற் கம்பலம்
மன்னருய்ப்பன மகிழ்ந்து தாங்கினார் சீவக. 2686

நிலவிய தாது பொங்க நீண்மலர் மணலிற்போத்துக்
கலவியிற் படுத்த தாப்பொற் கம்பல மொத்த
தன்றோ சீவக. 2711

**கருவி**

கையமைத் திளைஞ்நங் கருவி வீசினார் சீவக. 2214

**கலிங்கம்**

கலிங்கம் துயல்வர, செடி தொடிதெளிர்ப்ப வீசி நற். 20
புகாப் புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு நற். 90
மாசுபட்டன்றே கலிங்கமும் தோளும் நற். 380

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ — குறுந். 167

நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ — பதி. 2:2

கழுவுறு கலிங்கம் கடுப்பச் சூடி — பதி. 8:6

அல்கலைசில் பூங் கலிங்கத்தள் ஈங்கிதோள்
நல்கூர்ந்தார் செல்வ மகள் — கலித். 55

காதல் கொள் வதுவை நாட்கலிங்கத்துள் ஒடுங்கிய — கலித். 69

ஒருத்தி அடிதாழ் கலிங்கம் தழீஇ ஒருகை
முடிதாழ் இருங்கூந்தல் பற்றி — கலித். 92

கொட்டும் புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து ஒடுங்கினள் — புறம். 86

முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ — புறம். 136

பாம்புரியன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண் பூங்கலிங்க முடீஇ — புறம். 283

நேர்கரை நுண்ணூற் கலிங்க முடீஇ — புறம். 392

பகன்றைப் புதுமலரன்ன அகன்றுமடி கலிங்கம் உடீஇ — புறம். ɔ93

பாம்புரித்தன்ன வான்பூங் கலிங்கம் — புறம். 397

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கில் மிசை அசைஇயது ஒருகை — திருமுருகு. 109

காமைஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன் — சிறு. 85-86

நிழல் திகழ் நீலம் நாகம் நல்கிய கலிங்கம் — சிறு. 95

ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்
இரும் பேரொக்கலோடு ஒருங்குடன் உடீஇ — பெரும். 469-70

வெயிற் கதிர் விழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்கரன்ன சிவந்து நுணங்குருவிற்
கண் பொரு புகாஉ மொண்பூங்கலிங்கம்
புரளும் தானை — மது. 431-33

பொன்னுரை காண்மரும் கலிங்கம் பகர்நரும் — மது. 513

மென்னூற் கலிங்கம் கமழ்புகை மடுப்ப — மது. 554

சோறமைவுற்ற நீருடை கலிங்கம் — மது. 721

காடிகொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோட்டமை தூமடி விரித்த சேக்கை — நெடு. 134-35

அம்மாசூர்ந்த அவிர் நூற் கலிங்கமொடு — நெடு. 146

இழைமருங்கறியா நுழை நூற்கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ — மலை. 561

கோடிக் கலிங்கமுடுத்து குழல் கட்டி
நீடித் தலையை வணங்கி — சிலப். 21:32

நுரையென விரிந்த நுண் பூங்கலிங்கம் — சிலப் 22:21

மையுண்டு கழுமிய மாசுபடு கலிங்கத்திளையோர்
பெருங். 1.35:120-21

பட்டியற் கலிங்கமொடு பாசிழை நல்கி
இலைத் தொழிற் றடக்கையள் — பெருங். 1.37.156-57

கருங்காற் கலிங்கமொடு காஅழ் கலக்கி — பெருங். 1.37:239

கலிங்க வட்டியும் கலம் பெய் பேழையும் — பெருங். 1.38:285

அரவிற் பரந்த அல்குல் மீமிசைக்
கலாஅய்க் கிடந்த துலாத்தரு கலிங்கம் — பெருங். 1.42:140-41

கற்றோய் கலிங்கம் கட்டிய கச்சையினன் — பெருங். 1.46:97

பையர வல்குற் பவழப்பல்காசு
கைபுனை கலிங்கத்து ஐது கலந்து ஒன்றி — பெருங். 14.6:259-60

காடிக் கலந்த கோடிக் கலிங்கம்
கழும மூட்டும் நறும் புகை — பெருங். 1.54:9-10

நுரைபுரைக் கலிங்கம் ஒருமுலை புதைப்ப — பெருங். 2.5:86

பானீர் நெடுங்கடல் பனிநாள் எழுந்த
மேனீராவியின் மெல்லிதாகிய கழுமடிக் கலிங்கம்
பெருங். 2.7:154-6

கையமைத்தியற்றிய கலிங்கத் துணியினர் — பெருங். 3.1:99

கண்ணெழிற் கலிங்கம் திண்ணென அசைத்து — பெருங். 3.9:61

நுரைவிரித்தன்ன நுண்ணூற் கலிங்கம் — பெருங். 3.17:170

கல்லுண் கலிங்கம் கட்டிய அரையினன் — பெருங். 4.7:158

கல்லுண் கலிங்கம் நீக்கி — பெருங். 4.16:33

உடுத்தாள் கற்றோய் கலிங்கம்
உரவோன் சிறுவன் உயர்கெனவே — சீவக. 353

மின் விரித்தனைய தொத்து விலைவ ரம்பறியலாகா
இன்னுரை கலிங்கம் ஏற்ப — சீவக. 697

வழங்கு வங்கக் கலிங்கக் கடகமும் — சீவக. 863

தேம்புகை யுள்ளுறவுண்ட கலிங்கமுடுத்தபின் — சீவக. 1476

கன்னிக் கலிங்கமகிலார்ந்து கவவிக்கிடந்த குறங்கினான் — சீவக. 1658

வந்துபனி வார்ந்து முலைக் கலிங்கமது நனைப்ப — சீவக. 1785

காதிற் கடிப்பிட்டு கலிங்க முடுத்து — நாலா.திவ்.பெரிய.திரு.10:8:1

கால் என, கடுஎன, கலிங்கக் கம்மியர் நூல்என — கம்ப. 9120

ஓட்டிய கலிங்கந் தாண்மேல் திரைத்துடுத்து — சூளா. 842

ஊதாவியானுடங்கு மொள்ளரத்த நுண்கலிங்க
மொன்று சேர்த்தி — சூளா. 1538

காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த — கலிங். 63

ஒரு கலிங்கம் ஒருவன் உடுத்தாதே — கலிங். 454

அரைக் கலிங்கம் உரிப்புண்ட கலிங்கர் — கலிங். 466

வீழ்ந்த கலிங்கர் நிணக் கலிங்கம்
விரித்து விரித்துப் புனையீரே — கலிங். 509

**கலை**

பட்டார் கலையுடையும் — நீல. 130

முலைமிசைக் கச்சொடு கலையும் மூட்டுஅற — கம்ப. 1070

நீள்கலை தாங்கலர் — கம்ப. 1485

கலைபுனை துகிலும் தோடும் ஒழிய போய்க் கரை கொள்வாரும் — சூளா. 1694

காலு மொரொன்றுடையர் கலையிலர் — சூளா. 1975

**கவசம்**

புல்நிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின் — புறம். 13

மெய்புகு கவசமும் — சிலப். 14:169

கவசம் வீழ்ந்த சாமரையற்ற — சீவக. 797

புன்மன வேந்தர் தங்கள் பொன்னணி கவசம்கீறி — சீவக. 799

வின்மரிய தோள்விசயத் தத்தனுயிர்க் கவசம் சீவக. 1792

பொன்னணிக் கவசமின்ன சீவக. 2270

மெய்புகு பொன்னணி கவசம் ஒப்பன சீவக. 2819

கவசமா யாருயிராய் கண்ணாய் மொய்த்தவமாய்
......... காப்பானை கம்ப. ஆரணி. 99

கழலினர் தாரினர் கவச மார்பினர் கம்ப. ஆரணி. 404

உரம்படர் தோளின் மீளாக்
கவசமிட்டுடைவாள் ஆர்த்தான் கம்ப. ஆரணி. 421

சிலையன் வீரக் கவசத்தன் கம்ப. ஆரணி. 422

கைகள் வாளொடு களப்பட அழுத்தற கவச
மெய்கள் போழ்பட கம்ப. ஆரணி. 443

கேடகத் தடக்கைய கிரியின் றோற்றத்த
ஆடகக் கவசத்த கவசமாடுவ கம்ப. ஆரணி. 480

நிச்சயமென்னும் கவசத்தால் கம்ப. ஆரணி. 503

கருவியோடுவன்கச்சையுங் கவசமும் கழல கம்ப. ஆரணி. 511

காய்ந்த வெஞ்சரம் நிருதர் தம்கவசமார்புருவ கம்ப. ஆரணி. 512

கவசம்படர் மார்பிடைச் சுற்றினான் கம்ப. 7240

பூஇயல் மீன் எலாம் பூத்த வான் நிகர்
மேவு இரும் கவசம் இட்டு இறுக்கிவீக்கினன் கம்ப. 7254

ஆரத்தொடு கவசத்து உடல் பொடிபட்டுஉக கம்ப. 7316

அள்ளாடிய கவசத்து அவிர் மணி அற்றன கம்ப. 7320

சூர் இழந்து வன்கவசமும் இழந்து தும்பு இழந்து கம்ப. 7377

கற்றை அம்சுடர்க் கவசமும் கட்டு அறக் கழித்தான் கம்ப. 7385

இட்டம் உந்தும் எழில் இரு நான்கு தோள்
கடவுள் ஈந்த கவசமும் கட்டினான் கம்ப. 7474

நல் நெடுங் கவசத்து நாமவெங்கணை
மின்னொடு நிகர்ப்பன பலவும் வீசினான் கம்ப. 7711

கண்ணுதல் பெருங் கடவுள் தன்
கவசத்தைக் கடந்தில கதிர் வாளி கம்ப. 7732

காந்து வெஞ்சுடர்க் கவசம் அற்று உகுதலும் கம்ப. 7734

பொன் தாள் கவசம் புகுதர, முகிலின் நின்றான் கம்ப. 7875

வில் இடை அறுத்து, வேல் துணித்து வீரர் தம்
எல்லிடு கவசமும் மார்பும் ஈர்ந்து கம்ப. 7962

நொய்து, அவன் கவசம் கீறி நுழைவன கம்ப. 8050

நூறுகோல் கவசம் கீறி நுழைதலும் கம்ப. 8051

எழுத்து அற்றார் கவசம் அற்றார் கம்ப. 8231

ஏழ் இரு நூறு வாளி
இலக்குவன் கவசத்து எய்தான் கம்ப. 8247

ஆறுநூறு அம்பு செம்பொன்
கவசம் புக்கு அழுந்த எய்தான் கம்ப. 8249

தோளின்மேல் மார்பின் மேலும்
சுடர்விடு கவசச் சூழல் கம்ப. 8250

கண்ட நாணும் கழலும் கவசமும்
.........
விண் தலத்தினின் மீன் என வீழ்தலால் கம்ப. 8270

கையினால் பெரிய அம்பால்
கவசத்தைக் கழித்து வீழ்த்தான் கம்ப. 8302

கவசத்தைக் கழித்து வீழ்ப்பக்
காப்புறு கடனின் றாகி கம்ப. 8303

அளப்பிலாத பகழிகள்; கவசம் பற்று
அற்று அருகின கம்ப. 8419

துவசம் அன்ன தம் கூர் உகிர்ப்
பெருங்குறி தோள் தோள்மேல்
கவசம் நீங்கினர் கம்ப. 8498

அம்புயக் கண்ணன் கண்டத்து ஆயிரம்பகழி நாட்டி
தம்பி தன் கவச மீதே இரட்டி கம்ப. 8552

தேவுண்ட கீர்த்தி அண்ணல் திருஉண்ட கவசம் சோர கம்ப. 8554

வடிநெடுஞ்சிலை அறும் கவசமார்பு அறும் கம்ப. 8623

கங்கணத் தொடு கலசமும் மூட்டு அறக் கழல
வெங்கடுங்கணை ஐஇரண்டு உருமென வீசி கம்ப. 8650

தனுவும் வெங்கணைப் புட்டிலும் கவசமும் கம்ப. 8658
கைச்சிலை கோடி என்று கொடுத்தனன் கவசத்தோடும்
கம்ப. 9077

மின்மின் கொள் கவசம் இட்டான் கம்ப. 9154

ஏமத்தட்ங் கவசத்து இகல் அகலத்தன கம்ப. 9184

கலை வெங்கணை, கவசம் புக்கு ஆகமும் கழன்று ஓடிட
கம்ப. 9188

கவசத்தையும் நெடு மார்பையும் கழன்று அக்கணை கழிய
கம்ப. 9193

வின்ளா நெடுங்கவசத்திடை நுழையாது உக வெகுண்டான்
கம்ப. 9194

நெடுங்கவசத்தையும் குலையாச் செல்லும்
கடுங்கணை யாவையும் கம்ப. 9196

ஒளிகிளர் கவசம் நுழைந்து உறுகில கம்ப. 9274

ஆயிடை இளையவன் விடமனையான்
அவன் இடு கவசமும் அழிவுபடத் தூயினன் கம்ப. 9275

தூக்கிய துணிவாங்கி தோளொடு மார்பைச் சுற்றி
வீக்கிய கவசபாசம் ஒழித்து அது விரைவின் நீக்கி கம்ப. 9321

கருணை அம் கடலே அன்ன
எல் ஒளி மார்பில் தீராக் கவசம் இட்டு கம்ப. 9505

கண்ணனே எளியேன் இட்டகவசமே கம்ப. 9507

சொல் அறுக்கும் வலிஅரக்கர் தொடுகவசம்
துகள் படுக்கும்
கம்ப. 9537

அணிகண்டிகை கவசம் கழல் திலதம் முதல் அகலம் கம்ப. 9549

கருவி நான்முகன் வேள்வியில் படைத்ததும் கட்டிச்
செருவில் இந்திரன்தந்த பொன் கவசமும் சேர்ந்தான் கம்ப: 9786

ஒருதன்னின் பின்ன கவசத்த பொருள் இல்லை கம்ப..9820

வில் ஒன்றால கவசம் ஒன்றால் கம்ப. 9859

கருங்கணைப் புட்டிலும் கவசம் தானும் மற்று
இடம்படு சுரிகையும் சேர ஈந்தவன் கம்ப. 10375

மடுத்த வாளும் கேடகமும் கவசக் கண்ணு மார்பகமும்
மடுத்துக் குத்தினாற் போலக் கழிந்தது அம்பு சூளா. 1350

**காம்பு**

கச்சொடு பொற்சுரிகை காம்பு கன (க) வளை
உச்சி மணிச் சுட்டி
நாலா. திவ். பெரி. திரு. 1:3:8

கச்சொடு பட்டைக் கிழித்து காம்பு
துகிலவை கீறி
நிச்சலும் தீமை செய்வாய் நாலா. திவ். பெரி. திரு. 2:7:3
காம்பொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
தேவா. சுந். 46:2

**காழகம்**

கரையிடைக் கிழிந்த நின் காழகம் வந்து உரையாக்கால்
கலித். மரு. 73
ஒருத்தி வரியார் அகலல்குற் காழகம்
ஒருத்தி அரியார் நெகிழ்த்தணி சுறாதட்ப கலித். மரு. 92
நீயே வினை மாண் காழகம் வீங்கக் கட்டி
புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே கலித். பாலை. 7
களிறு மேற் கொள்ளவும் காழக நீப்பவும் புறம். 41
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலரவுடீஇ திருமுருகு. 183-84
காழகம் செறிந்த உடையினன் சிலப். 22:91
ஒண்ணிறக் காழகம் சேர்ந்த உடையினன் சிலப். 22:98
காளக உடையினன் கந்து நாமனும் சீவக. 320
காழகமுட்டப்பட்ட காரிருட் டுணியு மொப்பான் சீவக. 1230

**காழம்**

காழமிட்ட குறங்கினன் கம்ப. 650

**குப்பாயம்**

வரிக் குப்பாயத்து வார்பொற் கச்சையர் பெருங். 1.40:378
வெங்கண் நேர்க்கிற் குப்பாய மிலேச்சனைச்
செங்கண் தீவிழியா சீவக. 438
நுதிமயிர்த் துகிற் குப்பாயம் புகுகென நூக்கினானே சீவக. 678
குப்பாயமென நின்று காட்சி தரும்
கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையே
நாலா. திவ். பெரி. திரு. 3:5:6
கோர்த்த முத்தின் குப்பாயப் புகர்
மால்யானைக் கன்றே போல நாச்சி. திரு. 14-4

**கூறை**

அத்திட்ட கூறை அரைச் சுற்றி வாழினும்
பத்தெட்டுடைமை பலருள்ளும் பாடெய்தும் நாலடி. 281

ஊனொடு கூறை...மானொடு கேட்டு ஏலாதி. 63

கருக்கினால் கூறை கொள்வார் பழமொழி. 321

நாறைங் கூந்தல் நடுங்கு துயரெய்தக்
கூறை கோட்பட்டுக் கோட்டு மாவூரவும் சிலப். 15:98

படுத்துடன் வைத்த பாயற்பள்ளியும்
உடுத்த கூறையும் ஒள்ளெரியுறாஅ மணி. 16:29-30

பேனறாக் கூறை பெருமுருகு நாறுமேல் நீல.256

கூறை யெய்தலும் நீல. 355

செங் கூறையாய் நீல. 534

காழனொடு மனையும் கட்டுறுத்தியாத்த
கூறை, வெள்ளூறிக் குண்டிகைக் காவினர்
தரும தருக்கர் தற்புறம் சூழ பெருங். 1.36:227-29

மூடு கூறையின் மூடுதல் வெண்டலை ஓடு கோடல் சீவக. 1427

நண்ணாச் சிறுகூறை பாகமோர் கையாக உடுத்து சீவக. 2625

கூறை சோறிவை தந்தெனக் கருவி நாலா.திவ்.பெரிய.திரு7:7:8

கோலப் பணைக் கச்சும் கூறையுடையும்
நாலா. திவ். பெரிய. திரு. 3:3:7

பூநிற கூறைசுற்றினாள் போல் கம்ப. 6772

வேசியர்கள் உடுத்த கூறை வேந்தர்கள் சுற்ற கம்ப. 10466

வெற்றரைச் சமணரோடு விலையுடை கூறை போர்க்கும் நற்றர்
தேவா. திருநா. 68:9

கூறையால் மூடக் கண்டு கோலமாக் கருதினாயே
தேவா. திருநா. 77:9

குறியினின் றுண்டி கூறையிலாச்
சமண் நெறியை விட்டு தேவா. திருநா. 190:4

ஈறில் கூறையனாகி யெரிந்த வெண்நீறு பூசிதேவா. திருநா. 211:5

தங்கள் கூறை யொன்றின்றியே
...... அமணராற் தேவா. சுந். 33:9

இம்மையே தரும் சோறும் கூறையும் தேவா. சுந். 34:1

குற்றொருவரைக் கூறைகொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம் தேவா. சுந். 35:4

கூறை கொண்டு ஆறலைக்குமிடம் தேவா. சுந். 49:1

உயிர்க் கொலை பலநேர்ந்து நாடொறும்
கூறை கொள்ளுமிடம் தேவா. சுந். 49:3
பீறற் கூறையுடுத்து தேவா. சுந். 49:4

## கொய்சகம்

மானமாக் கலுழன் சிறைவிரித்தென கொய்சகம்
மருங்கு உறச் சேர்த்தி கம்ப. 9788

கோதையுங் குழைவின் பட்டின்
கொய்சகத் தலையுந் தாழ சூளா. 1640

## கோசிகம்

பைங்காற் பாதிரி போது பிரித்தன்ன அங்கோசிகம்
பெருங். 1.42:204

அங்கோசிக ஆடை பூத்தன பாதிரி சீவக. 1650

களிசெய்கோசிக நீர் விழக் கடிமாலை மேற்றொடர்ந்து சீவக. 1673

கோசிகத்தினுலுற்ற கொழுங்கனல் கம்ப. சுந்தர. 1205

முறைவிரித் தன்ன முறுக்கிய
கோசிக மருங்கில்
பிறைவிரித்தன்ன வெள் எயிற்று
அரவமும் பிணித்து கம்ப. 9788

பொற்பமை செங்கோடிக மொடு ஆடை புதைவுற்ற பேழை,
சூளா. 870

## கோடி

கோடி கடையுள் விரியார் ஆசாரக்கோவை-44

மின்னுக் கோடியுடுத்து விளங்குவிற்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போல் சிலப். 11:45

கோடி ஏந்தினர் பட்டேந்தினர் சிலப். 20:14

கோடி மூடியெடுப்பதன் முன்னம்
கௌத்துவ முடைக் கோவிந்தனோடு நாலா.திவ்.பெரி.திரு. 4:5:8

மந்திரக் கோடியுடுத்தி
அந்தரிகூட்டக் கனாக் கண்டேன் தோழீநான் நாச்சி. திரு. 6:3

உயர்த்த கோடி கொண்டருளும் பெரிய. அமர். 28

## கோதை

சிலைகொணாணெடிய கோதை யொலியேறு கம்ப. ஆரணிய. 24

தடக்கைக்கு, இனிய கோதையும் துறந்தனர் கம்ப. 1658

வீரம், பொன் மின்கொள் கோதை கையில் பூட்டினான் கம்ப. 9154

கோலம்சார் நெடுங்கோதையும் புட்டிலும் கட்டி கம்ப. 9791

புட்டிலொடு கோதைகள்...அங்கையின் இலங்கைக் கட்டி கம்ப. 9821

## கோவணம்

சுருள் கோவணம் தற்றவர் தேவா. திருநா. 17:5

கோவணத் தோடக்கணிந்த வம்மானை தேவா திருநா. 19:2

கோவணமுடுத்தவாறும் கோரைவசைத்தானும் தேவா. திரு. 77:2

சங்கக் கலனும் சரிகோவணமும் தேவா. திருநா. 112:2

அரைப்பாலுடுப்பன கோவணம் தேவா. திருநா. 114:7

கொண்ட கோவண வாடையன் தேவா. திருநா. 120:9

விரிகொள் கோவண வடை விருத்தரோ தேவா. திருநா. 124:4

உடுப்பர் கோவணம் உண்பதுபிச்சையே தேவா. திருநா. 126:5

சடையனைச்சரி கோவண வாடைகொண்டுடையன் தேவா. திருநா. 131:8

குறைகொள் காதினர் கோவண வாடையர் தேவா. திருநா. 152:1

அரையார் கோவண வாடையன் தேவா. திருநா. 167:7

கோவணத்தர் வெண்ணூரன் மார்பர் தேவா. திருநா. 216:9

விரிகோவணமசைத்த வெண்ணீற்றான் தேவா திருநா. 236:8

வெளுத்தமைந்த சீளொடு கோவணமுந்தற்று தேவா. திருநா. 275:2

தூவெளுத்த கோவணத்தை யரையிலார்த்த தேவா. திருநா. 281:1

கோவணம் மேற்கொண்ட வேடம் சுந். 5:10

அரையார் சீளொடு கோவணமும் அரவும் அசைத்து சுந். 27:6

கோவணம் கொள் குழகனை சுந். 40:8

கந்தை கீளாடை கோவணம் கருத்தறிந்துதவி பெரிய. அமர்நீதி. 3

கறைக் களத்திறை கோவணம் பெருமை முன்காட்டி
பெரிய. அமர்நீதி. 6

தஞ்சை மாமறைக் கோவண ஆடையினதசைவும்
பெரிய. அமர்நீதி. 8

யாணர் வெண்கிழிக் கோவணம் ஈதல் கேட்டு பெரிய. அமர்நீதி.11

உணங்கு கோவணம் வைத்து
குணங்கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்தது
பெரிய. அமர்நீதி. 13

ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவாறுமக்கே
பெரிய. அமர்நிதி 14

கொடுத்த கோவணம் கைக்கொண்டு பெரிய. அமர்நீதி. 15

கந்தை சீருடை கோவணம் அன்றி பெரிய. அமர்நீதி. 16

போனவேதியர் வைத்த கோவணத்தினைப் போக்கி
பெரிய. அமர்நீதி. 17

நான் தந்த கோவணத்தைக் கொண்டுவாரும் பெரிய.அமர்நீதி.19

வைத்த கோவணம் முன் செய்ததென் பெரிய. அமர்நீதி. 20

பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின பெரிய. அமர்நீதி. 21

கீறு கோவணம் அன்று பெரிய. அமர்நீதி. 24

நல்ல கோவணம் கொடுப்பன் பெரிய. அமர்நீதி. 26

இக்கோவணம் அன்றி பெரிய. அமர்நீதி. 28

அணியும் கோவணம் நேர்தர அமையும் பெரிய. அமர்நீதி. 29

அலர்ந்த வெண்ணிறக் கோவணம் பெரிய. அமர்நீதி. 30
உடுத்த கோவணம் ஒழிய பெரிய. அமர்நீதி. 31
அடுத்த கோவணம் இது பெரிய. அமர்நீதி. 31
கோவணம் ஒரு தட்டில் இட்டார் பெரிய. அமர்நீதி. 32
அலகில் கோவணம் ஒத்திய பெரிய. அமர்நீதி. 34
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத்தட்டு பெரிய. அமர்நீதி.35
எங்கள் கோவணம் நேர்நிற்க வேண்டுவ பெரிய. அமர்நீதி. 37
சிவன் விரும்பிய கோவணமிடுஞ் செழுந் தட்டுக்கு
பெரிய. அமர்நீதி. 39

பாங்குடை உடையுங்கீளும் முழுதில்
கோவணமும் நெய்வார் பெரிய. நேச. 3

உடைபெபாடு நல்ல சீறாம் ஒப்பில்
கோவணமும் நெய்து பெரிய. நேச.4

**சட்டை**

நிணச் சட்டையிட்டு நின்ற — கலிங். 156

**சாலிகை**

சாலிகை யுடம்பினர் தறுகணாளரே — சீவக. 2217

சாலிகை யாக்கையர், தணிப்புஇல் வெஞ்சர
வேலியைக் கடந்திலர் — கம்ப. 9606

திண்மார்பின் மிசைச் செறி சாலிகையின் — கம்ப. 9643

சாலிகை முதல ஆன போர்ப்பரம்
தாங்கிற்று எல்லாம் — கம்ப. 9719

**சிதர்**

துய்ப்போர் தம்மனைத் துணிச் சிதர் உடுத்து — மணி. 11:109

**சிதர்வை**

நின்னரைப் பாசியன்ன சிதர்வை நீக்கி — பெரும். 462-68

**சிதவல்**

தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர் — குறுந். 146

**சிதவற்றுணி**

சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினை
ததர் வீழ்ப் பொடித்துக் கட்டிய உடையினன் — மணி. 3:106-7

**சிதாஅர்**

நீர்ப்படு பருந்தின் ஈர்ஞ்சிறகன்ன
நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை — பதி. 2:2

வேற்றிழை நுழைந்த வேர்நனைச் சிதாஅர் — புறம். 69

சிதார் உடுக்கை முதாரிப் பாண — புறம். 138

பாறிய சிதாரேன் — புறம். 150

திறனில் சிதாஅர் வறுமை நோக்கி — புறம். 337

என்னரை, நிலத்தினஞ் சிதைந்த சிதாஅர் களைந்து — புறம். 385

ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி — புறம். 392

ஈன்ற வரவினாவுரிக் கடுக்குமென்
தொண்டு படு சிதாஅர் துவர நீக்கி — புறம். 393

விரும்பிய முகத்தனாகி என்னரைத்
துரும்புபடு சிதாஅர் மருங்குநீக்கி புறம். 400

ஈரும் பேனும் இருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி பொருநர். 79-81

பாசிவேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கி பொருநர். 153-54

**சீரம்**

தீரா மனத்தாள் தர வந்தன சீரம் கம்ப. 1838

**சீரை**

சீரை தைஇய யுடுக்கையர் திருமுருகு. 126

சீரையுடுக்கை வார் வளர் புன்சடை பெருங். 2.15:40

சுற்றிய சீரையும் உழையின் தோற்றமும் கம்ப. 251

ஆய்தந்த மென்சீரை அணித்தடி தாழ்ந்து நின்ற கம்ப. 1842

திருஅரைத் துகில் ஒரீஇ சீரை சாத்தியே கம்ப. 1843

தான் புனை சீரையைத் தம்பி சாத்தி கம்ப. 1844

பொன் அரைச் சீரையின் பொலிவும் நோக்கினான் கம்ப. 1853

தாழ்வினை அது வரச்சீரை சாத்தினான் கம்ப. 1854

சுற்றிய சீரையின் தொடர்ந்த தம்பியன் கம்ப. 1861

துன் நெடுஞ் சீரையும் சுற்றிஅப்
பொன் நெடுந் தேரினிடை கம்ப. 1878

திருஅரைச் சுற்றிய சீரை ஆடையின் கம்ப. 1883

பழுது சீரையின் உடையினன் கம்ப. 1909

புனையும் சீரை துணிந்து புனைந்தனள் கம்ப. 1919

சீரைச் சுற்றித் திருமகள் பின்செல கம்ப. 1925

ஊரை நூறும் கருங்கனலுட் பொதி
சீரை நூறவை சேமஞ் செலுத்துமோ கம்ப. சுந்தர. 1144

**சீவரம்**

சீவரம் போற்கட்டில் செப்புவதென்னோ நீல. 372

**சேலம்**

சேலம் திருத்தி பெருங்' 4:12:97

**சேலை**

சேலையாற் செய்ய வாய் புதைத்த செங்கையன்
கம்ப. ஆரணிய. 570

சேலையின் வாங்கும் புதுமது மூவரு. 3. 410-11

**தழை**

பல்பூம் பகைத் தழை நுடங்கு மல்குல் நற். குறிஞ். 8

தழையோர், கொய்தழை அரும்பியஞாழல் நற். குறிஞ். 54

நெய்தலும் ஓம்புமதி...அணியுமார் அவையே நற். குறிஞ். 60

தழையும் தாரும் தந்தனென் இவனென நற். குறிஞ். 80

அம்பகை நெறித் தழை அணி பெறத் தைஇ நற். குறிஞ். 96

கா்வி, அம்பகை நெறித் தழை அணிபெறத்தைஇ நற். குறிஞ்.123

பிணையல் அம் தழை தைஇய நற். குறிஞ். 170

தளிர்சேர் தண்தழை தைஇ நற். குறிஞ். 204

தழையணிந்து அலமரும் அல்குல் நற். குறிஞ். 320

உடுக்கும் தழை தந்தனனே நற். குறிஞ்.358

பைந்தழை சிதைய, கோதை வாட நற். குறிஞ். 363

கோடேந்து அல்குல் தழையணிந்து நற். குறிஞ். 368

ஐதகல் அல்குல் அணிபெறத் தைஇ நற். குறிஞ். 390

கூந்தலாம்பல் முழு நெறி அடைச்சி குறுந். 80

சாரற் றழையணி அல்குல் மகளிர் குறுந். 125

தழையணி அல்குல் தாங்கல் செல்லா குறுந். 159

திருந்திழை யல்குற்குப் பெருந்தழை யுதவி குறுந். 214

அய வெள்ளாம்பல் அல்லி அம்பகை நெறித்தழை
தித்திக் குறங்கினூழ் மாறலைப்ப குறுந். 293

பசுங்குழைத் தழையினும் உழையிற் போகான். குறுந். 294

உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயம் குறுந். 295

குவளைத் தண்தழை யிவளீண்டு வருந்த குறுந். 342

தழை தாழ் அல்குல் இவள் புலம்ப அகல குறுந். 345
மணலாடு மலிர்நிறை விரும்பிய வொண்டழைப்

புனலாடு மகளிர்க்குப் புணர்துணையுதவும் ஐங். 15

நுடங்கு தழைத் திதலை அல்குல் ஐங். 72

வண்ண வொண்டழை நுடங்க வாலிழை
ஒண்ணுதல் அரிவை ஐங். 73

தண்டழை விலையென நல்கினன் நாடே ஐங். 147

நெய்தலம் பகைத் தழை பாவை புனைமார்
உடலகம் கொள்ளாரின்மையின் ஐங். 187

கானல் ஞாழற் கவின் பெறு தழையள் ஐங். 191

தானும் மலைந்தனன் எமக்குத் தழையாயின ஐங். 201

செயலையம் பகைத் தழை வாடுமன்னாய் ஐங். 211

வண்டுபடு கூந்தற் தண்டழைக் கொடிச்சி ஐங். 256

ஆய்தழை நுடங்கு அல்குல் ஐங். 291

அலர்ந்த ஆம்பலக மடிவையர் பதிற். 27

செம்பொறிச் சிலம்பொடு அணித்தழைத் தூங்கும் பதிற். 53

தழையுங் கோதையு மிழையு மென்றிவை
தைஇனர் மகிழ்ந்து கலித். 102

இலங்கேர் எல்வளையேர் தழை தைஇ கலித். 125

ஒலிக்குழை செயலையுடை மாணல்குல் அகம். 7

தலைமுடி சான்ற தண்டழை தைஇ அகம். 7

மணிப்பூம் பைந்தழை தைஇ அகம். 20

அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர் அகம். 59

பாசளைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவு அணி மகளிர் தழைஅணிக் கூட்டும் அகம். 70

கழனியாம்பல் முழுநெறிப் பைந்தழை அகம். 156

அரிமலராம்பலோடார் தழை தைஇ அகம். 176

வயலையம் பிணையல் வார்ந்த கவா அன் திதலை அல்குல்
அகம். 189

தழையணிப் பொலிந்த கோடேந்து அல்குல் அகம். 201

அம்பகை மடிவைச் குறுந்தொடி மகளிர் அகம். 230

பெருந்தண் மாத்தழை யிருந்த அல்குல்

தாருந் தையின தழையுந் தொடுத்தன அகம். 259

பொலங்காசு நிரைத்த கோடேந்தல்குல்
நலங்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வர அகம். 269

ஐதகல் அல்குல் தழையணிக் கூட்டும்
கூழை நொச்சிக் கிழது அகம். 275

தழையணி அல்குல் செல்வத் தங்கையர் அகம். 320

முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி அகம். 348

பைங்குழைத் தழையர் பழையர் மகளிர் அகம். 331

அல்குல் தழைக் கூட்டு அங்குழை யுதவிய அகம், 383
கொண்டைக் கூழை தண்டழைக் கடைசியர் புறம். 61

கூம்பவிழ் முழுநெறி புரள் வருமல்குல் புறம். 116

ஆம்பல், இளையமாகத் தழையாயினவே புறம். 248

மெல்லிழை மகளிர் ஐதக அல்குற்
றொடலையாகவும் கண்டனம் இனியே புறம். 271

தொன்று தாமுடுத்த அம்பகைத் தெரியல் புறம். 280

பைந்தழை துயல் வருஞ் செறுவிறற் புறம். 339

அணித் தழை நுடங்க ஒடி புறம். 340

ஏந்து கோட்டம்பூந் தொடலை அணித் தழையல்குல் புறம். 341

கருங்கால் வேங்கைச் செம்பூம் பிணையல்
ஐதேந்தல்குல் யாமணிந்து உவக்கும் புறம். 345

பைவிரி யல்குற் கொய்தழை தைஇ குறிஞ்சி. 102

பைந்தழை மாமகளிரொடு பட்டி. 9

புனைபூந்தழையற் ஐந். ஐம். 14

ஆம்பலணித் தழை யாரந் துயல் வருந்
தீம்புனலூ ரன் மகளிவள் திணை. மொழி. ஐம். 40

அன்னை யானீயு மருந்தழையா மேலாமைக்
கென்னையோ நாளை யெளிது திணைமாலை. நூற். 20

தன் குறையி தென்னான் தழை கொணருந் தண் சிலம்ப
திணைமாலை. நூற். 31

பைந்தழை அல்குற் பாவாய் சீவக. 1499

பிடிமுதிர் முலையினாடன் றழைத்துகிற் பெண்ணினொடும்
சீவக. 1231

சாந்து தண்டழையுஞ் சுரமங்கையர்க் கேந்தி நின்றன சூளா. 752

வயலாம்பல் நெறித்தவகைத் தழையள் சூளா. 809

விரையேற்று தளிரீனல் விழையாய் வாழி சூளா. 1126

அம்பொன் செய் கலாப வல்குலந் தழை புனைந்து சூளா. 1633

அல்குற்றடத்தெமர் கண்டால் அயிர்ப்பர் அதுவுமன்றிப்
பல் குற்றமும் வருமால் யாங்கள் வாங்கேம் பசுந்தழையே
தஞ்சை. 98

தழைப்பீலி மரவுரிமேல் சார எய்தி பெரிய. கண். 48

**தானை**

அரிவையது தானை என்கோ பரி. 11:28

இருந்துகிற் றானை யினொன்றிப் பொருந்தலை பரி. 16:23

பாய்ந்தாய்ந்த தானை பரிந்தானா மைந்தினை கலித். 96

பையென நோக்குவேன் தாழ்தானை பற்றுவேன் கலித். 96

தாரும் தானையும் பற்றி ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறுபோல புறம். 276

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் நாலடி. 131

நிலனகமுளியன் நீலத் தானையன் சிலப். 16:204

பட்டுடைத் தானைப் பைம்பூண் சுடர பெருங். 1.34:207

பூந்துகிற் றானைப் பற்றிக் காய்ந்தது பெருங். 1.35:202

வெண்டுகில், ஈரத்தானை நீரிலடைச் சோர பெருங். 1.40:99-100

பாப்புரியன்ன மீக் கொடானை
இரு புடைமருங்கினும் வருவளிக் கொசிந்து பெருங். 1.42:244-45

சேடக மகளிர், தன்மை கடுக்குந் தானைக் கச்சையர்
பெருங். 1.46:242-43

பானில வெண்டுகிலானத் தானையர் பெருங். 2.4:147

மேற்பட வெருவி நோக்கித் தானையை
விட்டிட்டொல்கி சீவக. 675

கச்சிற் றானை வீக்கா சீவக. 978

தானையாற் றடங்கணீரைத் துடைத்து மெய்தழுவிக் சீவக. 1051

ஒன்றிய வுதிரச் செச்சை யொண்ணிண மீக்கொடானை
சீவக. 1080

விடுகணை தெரிந்து வீக்கற விசித்து சீவக. 1086

குழைந்த தார் நெகிழ்ந்த தானைக் கொற்றவன் சீவக. 2720

வணங்கி நாணி வாய்புதைத்து இலங்குதானை
முன்தலை ஒதுக்கி நின்ற மொய்ம்பன் கம்ப. 10516

தாளில் வாழ் செருப்பர் தழைத்த நீடு தானையர்
பெரிய. கண்ணப்ப. 68

**துகில்**

மூரி எக்கர் நுண்துகில் நுடக்கம் போல் நற். 15

துகில் விரித்தன்ன வெயிலவிர் உருப்பு நற். 43, 90

பல்வியர், அந்துகில் தலையின் துடையினள் நற். 129

வீடுறு நுண்துகில் ஊடு வந்து இமைக்கும் நற். 366

பூந்துகில் அல்குல் தேம்பாய்க் கூந்தல் பதி. 6-4

மீப்பால் வெண்டுகில் போர்க்குநர் பூப்பால்
வெண்டுகில் சூழ்ப்ப குழல் முறுக்குநர் பரி. 10:79-80

துகில் சேர் மலர்போல் மணிநீர் நிறைந்தன்று பரி. 12:93

துகில் பொகி புனலிற் கரை காரேற்றன்று பரி. 12:98

ஞாயிற்று, அணி வனப்பமைந்த பூந்துகில் பரி. 13:2

தேம்படு மலர் குழைபூந்துகில் வடிமணி
ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ பரி. 17:1-2

அந்துகிற் போர்வை அணிபெறத்தைஇ கலித். 65

தைஇய பூந்துகில் ஐது கழல் ஒருதிரை கலித். 85

வேல் வலானுடைத் தாழ்ந்த விளங்கு வெண்துகிலேய்ப்ப
கலித். 105

யானை கொண்ட துகிற் கொடி போல அகம். 111

துகிலாய்ச் செய்கைப்பா விரித்தன்ன
வெயிலவிர்பு நுடங்கும் வெவ்வெங்களரி அகம். 293

துகில் விரிகடுப்ப நுடங்கி அகம். 337

பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல் அகம். 387

தன்னரைப் புகை விரிந்தன்ன பொங்கு துகிலுடீஇ அகம். 398

கோபத்தன்ன தோயாப் பூந்துகில் திருமுருகு. 15

மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன் திருமுருகு. 214

வேறு பஃறுகிலினுடங்கி அகில் சுமந்து திருமுருகு 296

துகிலணி யல்குறுளங்கியன் மகளிர் சிறுபாண். 262

துணங்கையம் பூதம் துகிலுடுத்தவை போல் பெரும். பாண். 235

பைங்காழ் அல்குல் நுண் துகில் நுடங்க பெரும். பாண். 329

துகில் முடித்துப் போர்த்ததூங்கல் ஓங்கு
நடைப் பெருமூதாளர் முல்லை. 53–4

ஆவுதி மண்ணி அவிர் துகின் முடித்து மது. 194

பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டல்குல் நெடுநல். 145

அவிர் துகில் புரையு மவ்வெள்ளருவி குறிஞ்சி. 55

பட்டு நீக்கித் துகிலுடுத்தும் பட்டினப். 107

பட்டும் துகிலும் உடுத்து நாலடி. 264

மானில மாண்ட துகிலுமிழ்வதொத்தருவி திணை.மா.நூற்குறி.6

தகரக் குழல் புரளத் தாழ்துகில் கையேந்தி திணை. பாலை. 77

மாதர், படாஅ முலைமேல் துகில் குறள். 1087

அந்துகின் மேகலை அசைந்தன வருந்த சிலப். 4:30

மென்றுகில் அல்குல் மேகலை நீங்க சிலப். 4:48

நிறங்கிளர் பூந்துகினீர்மையினுடீஇப் சிலப். 6:88

தொண்டி யோரிட்ட அகிலும் துகிலும் ஆரமும் சிலப். 14:107-8

அற்றங்காவர் சுற்றுடைப் பூந்துகில் மணி. 3:140

விரைமர மென்றுகில் விடுநிதிக் குப்பை மணி. 16:123

துகிற்கொடித் தொகுதியும் நீல. 26

தன்றுகிலிடைமேகலை துளங்க நீல. 60

துகிலிடை அல்குல் துளங்கும் நீல. 72

நுண்டுகிலும் மேகலையும் சூழ்ந்தவரை நீல. 129

மாண்டதுகிலல்குல் மாதர் நீல. 637

ஆவி நுண்டுகில் யாப்புறுத்தாயினும் பெருங். 1.36:64

ஆவி நுண்டுகில் யாப்புறுத்து பெருங். 1.36:165

தூத்துகில் உடுத்துத் தொடியுடைத் தடக்கை பெருங். 1.39:21

பல்காசு நிரைஇய அல்குல் வெண்டுகில் பெருங். 1.40:99

நனைந்து நிறங்கரந்த நார்நூல் வெண்டுகில் பெருங். 1.40:148

ஆவி நுண்டுகில் அணிநலம் நனைப்ப பெருங். 1.40:228

| | |
|---|---|
| நுரை புரை வெண்டுகில் அரைமிசை வீக்கி | பெருங். 1.40:286 |
| நுரையொடு பொங்கும் நுண்ணூல் வெண்டுகில் | பெருங். 1.40:295 |
| புனலக மூழ்கிப் பூந்துகில் களையார் | பெருங். 1.41:92 |
| மட்டப் பூந்துகிற் கட்டளைக் கச்சையர் | பெருங். 1.41:98 |
| புதுநூற் பூந்துகில் இருமடியுடீஇக் | பெருங். 1.42:145 |
| நறுநெய் தோய்ந்த நார்நூல் வெண்டுகில் | பெருங். 1.43:125 |
| அவிழ்ந்த பூந்துகில் அங்கையினசைஇ | பெருங். 1.43:147 |
| பூந்துகில் தழீஇக் குறிவயினின்ற குறள் வயின் நோக்கார் | பெருங். 1.44:36-7 |
| மறுவில் வெண்டுகில் மருங்கணி பெறீஇ | பெருங். 2.2:36 |
| யாணர்ப் பூந்துகில் அணிந்த அல்குல் | பெருங். 2.4:118 |
| பானில வெண்டுகிலானத் தானையர் | பெருங். 2.4:147 |
| மங்கல மணைமிசை வெண்டுகில் புதைஇ | பெருங். 2.5:78 |
| கடுங்கதிர்க் கலாவம் புதைத்த நிலா வெண்டுகிலினர் | பெருங். 2.5:84-5 |
| சித்திர நுண்டுகில் சேர்ந்த அல்குல் | பெருங. 2.5:109 |
| கூந்தல் சோர பூந்துகில் அசைஇ | பெருங். 2.5:118 |
| வெண்டுகிலிணைமடி விரித்தனர் உடீஇ | பெருங். 2.5:131 |
| ஈரநுண்டுகில் அகற்றிப் பேருடைக் கோடிப் பூந்துகில் கொய்து விளிம்புரீஇச் | பெருங். 2.5:164-5 |
| வெண்ணூல் பூந்துகில் வண்ணம் கொளீஇ | பெருங். 3.1:95 |
| பைந்துகில் அணிந்த பரவை அல்குலள் | பெருங். 3.5:17 |
| பூண்ட ஆகத்துப் பூந்துகில் அல்குல் | 3.8:54 |
| வெண்பூந்துகிலும் செம்பூங் கச்சும் | பெருங். 3.17:127 |
| கொய்து கொண்டுடீஇயக் கோடி நுண்டுகில் | பெருங். 3.22:228 |
| விழுத்தகு வெண்டுகில் விரித்தனன் உடுத்து | பெருங். 4.6:79 |
| நறுநீராட்டி செறிதுயில் உடீஇ | பெருங். 4.14:160 |
| கோடி நுண்டுகில் கோலமாக | பெருங். 4.16:35 |
| நிலாவுறழ்ப் பூந்துகில் நெகிழ்ந்திடைதோன்ற | பெருங். 5.1:137 |
| இசைந்த வெண்டுகில் ஏற்ற தானையன் | பெருங். 5.2:21 |

| | |
|---|---|
| உலாவெனப் போந் தோனிலாவுறழ்ப் பூந்துகில் | பெருங். 5.8:80 |
| பூத்த அகிலார் துகிலாய் பொனல்குல் | சீவக. பதி. 25 |
| குழுவின் மாடத் துகிற் கொடி போன்றவே | சீவக. 34 |
| ஆவியன்ன பூந்துகில் அணிந்த அல்குல் | சீவக. 67 |
| காடியுண்ட பூந்துகில் கழுமவூட்டும் பூம்புகை | சீவக. 71 |
| இளையவர், அந்துகில் பற்றவிற் | சீவக. 121 |
| துகிற் சேக்கை மேற் காமமே நுகர்வார் | சீவக. 135 |
| ஒண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோல் | சீவக. 164 |
| நீனிற வண்ணனன்று நெடுந்துகில் கவர்ந்து | சீவக. 209 |
| கலையார் துகில் ஏந்து அல்குல் | சீவக. 216 |
| பல்கிழியும் பயினும் துகினூர் லொடு | சீவக. 235 |
| சோர் துகில் திருத்தல் தேற்றாள் | சீவக. 302 |
| அணங்கு நுண்டுகில் மேலசைந்தாள் | சீவக. 344 |
| பூந்துகில் செறிந்த அல்குல் | சீவக. 399 |
| பைந்துகில் அருவி நெற்றி | சீவக. 428 |
| நீலத் துகிலிற் கிடந்த நிழலார் தழலம் மணிகள் | சீவக. 431 |
| விலைவரம்பறிதலில்லாத வெண்டுகில் அடுத்து | சீவக. 617 |
| வெண்டுகிற் கலாபம் வீக்கி | சீவக. 624 |
| ஆரந்துயல்வர வந்துகில் சோர்தர | சீவக. 631 |
| நுண்டுகில் அல்குல் | சீவக. 631 |
| நுரை கிழித்தனைய நொய்ம்மை வெண்டுகில் | சீவக. 699 |
| தூமமார்ந்த துகிலுறை நல்யாழ் | சீவக. 719 |
| வாட்கணீர், தோழித் தூத்துகிற் றோகையினீக்கினாள் | சீவக. 762 |
| நிணைத் துகில் உடுத்து | சீவக. 803 |
| உடுப்பன துகில்களு முரைக்குநானமும் | சீவக. 831 |
| ஆவியந்துகிலார் அமர்ந்தார்களே | சீவக. 873 |
| தூமஞ் சூடிய தூத்துகி லேந்தல்குல் | சீவக. 875 |
| தட்டிடை அந்துகின் மூடியதன் பினர் | சீவக. 880 |
| குருதித்துகிலின் உறையைக் கொழும் பொன் விரலின் நீக்கி | சீவக. 926 |

பூந்துகிலார்ந்த தோணி சீவக. 967

நெகிழ்ந்து சோர் பூந்துகில் நோக்கியே சீவக. 1004

புதிது பூந்துகில் குழல்கள் சோர்தலால் சீவக. 1015

தூமங்கமழ் பூந்துகில் சோர அசையாத் சீவக 1071

புகைநிறத் துகிலிற் பொன்னாண் டுயல்வர சீவக. 1077

பாலாராவிப் பைந்துகில் ஏந்திய சீவக. 1094

பான்மலிந்த வெம்முலைப் பைந்துகில் அரிவையர் சீவக. 1105

மணியியல் யவனச் செப்பின் மங்கலத் துகிலை வாங்கி சீவக. 1146

பூந்துகிற் மகளிரிற் பொலிந்து போர்த்ததோர்
பேய்வனம் பெரிய காண்டியே சீவக. 1181

துன்னினராட்டிச் செம்பொற் செப்பினிட்டுகிலுஞ் சாந்தும்
இன்னறும் புகையும் பூவும் கலத்தொடும்
ஏந்தினாரே சீவக. 1299

புகைய வாவிய பூந்துகில் ஏந்து அல்குல் சீவக. 1307

பாணிறத் துகில் பையர வல்குலார் சீவக. 1361

கோடி நுண்டுகிலுங் குழையும் நினக்கு சீவக. 1369

அரைவ வெண்டுகில் ஆக்கினான் இருதுணி சீவக. 1409

வெண்ணிறத் துகிலிலாங்கண் வீழ்ந்து மாசாகி நின்ற சீவக. 1433

நுண்டுகில் வேதலஞ்சி நெருப்பகம்பொதிந்து நோக்கி சீவக. 1434

அகழ் கிடங்கு அந்துகில் ஆர்ந்த பாம்புரி
புகழ் தரு மேகலை சீவக. 1444

பூந்துகில் பொருதிரை பொம்மல் வெம் முலை சீவக. 1492

பைந்துகின் முடி அணிந்தவர்பின் உலவு சீவக. 1558

நெடுந்துகில் விளிம்பொன்று ஏந்தி சீவக. 1568

சிறுநுதற் புருவ மேற்றாச் சேர்துகிற் றானைசோர சீவக. 1572

மாசில் வெண்டுகிலை நீர் தோய்த்து சீவக. 1649

தூமமார்ந்த துகிலணைப் பள்ளி மேற் சீவக. 1715

மணிபொதி துகிலிற் றோன்று மஞ்சு சூழ்வரைகள் சீவக. 1742

அந்நுண்டுகிற் கல்லரத்த அல்குலது வருத்த
செந்நுண்டுகி லுத்தரியம் புதைந்து சுவல்வருத்த சீவக. 1783

பைந்துகின் மகளிர் தேன் சோர் பவளவாய் சீவக. 1819

பூந்துகிற் கொடுத்த தீந்தேன் அகிற்புகை சீவக. 1855

தொடுகழற் குரிசினோக்கித் தூத்துகில் வீசினான் சீவக. 1863

வேய் நிறத் தோளினார்க்கு வெண்டுகில் மாலை சீவக. 1892

பூந்துகில் மாலைசாந்தம் புனைகலம் பஞ்சவாசம்
ஆய்ந்தளந் தியற்றப் பட்ட அடிசில் நீர் இன்ன
வெல்லாம் சீவக. 1896

சூழ்ந்த காசு தோன்ற வந்துகின் னெகிழ்ந்து சீவக. 1958

தூமத்தினார்ந்த துகிலேந்திய அல்குல் தாதை சீவக. 1966

நிலவு வெண்கதிர் நீர்மைய பூந்துகில் சீவக. 1982

மேனிகிளர் வெண்டுகிலும் விழுப்பொலிய நூலும் சீவக. 2024

கூந்தலகிற் புகையும் துகிற்கொழுமென்னும் புகையும் சீவக. 2032

நுண்டுகில் நெகிழ்ந்த அல்குல் மணிபரந்திமைப்ப சீவக. 2086

துளங்கொளி மாடத்துச்சித் துகிற் கொடி நுடங்கும்
வீதி சீவக. 2129

அம்புகை யார்ந்த அந்துகில் அல்குல் சீவக. 2332

மண்சேழ் மணியினுழையுந் துகினூலின் வாய்த்த சீவக. 2346

விளங்கு வெண்டுகில் உடுத்து சீவக. 2388

பூந்துகில் புறம் போர்த்தன போன்றவே சீவக. 2395

பரந்து பூந்துகில் பன்மணிக் கலம்
சுரந்து கொள்கென சுமக்க நல்குவார் சீவக. 2401

மடியிருந் துகிலுடை மாக் கணாடியும்
புடைதிரள் பூரண குடமும் பூத்தவே சீவக. 2406

மின்னிருந் துகிலேந்தி சீவக. 2434

கரையுடைத் துகிலிற் றோன்றும் காஞ்சன வட்டின் சீவக. 2467

தூமணித் துகில்களார்ந்த வலம்புரித் துலங்குசெப்பும் சீவக. 2475

தோக்கையந் துகிலினாடன்றுணை முலை
பொருதுசேந்த சீவக. 2477

குறங்கினிற் வைத்துத் துகிலினிற் றுடைத்துத்
தூய்தா சீவக். 2496

கடிமலரும் துகிலும் சாந்தும் புனைந்தாரே சீவக. 2501

தூமம் கொப்புளிக்கும் துகிற் சேக்கைமேல் சீவக. 2505

பானுரைய்யன பைந்துகில் அணிந்தான் சீவக. 2520

வண்ணத் துகிலுடுப்பின் வாய்விட்டு அழுவதுபோல் சீவக. 2625

பைந்துகில் நூலினால் இயன்றன நுனித்த
வெண்மைய சீவக. 2634

பானிலாக் கதிரென வம்மென் பைந்துகில் சீவக. 2635

பூந்துகில் ஒரு கையேந்திப் புகுமிடம் காண்டல்
செல்வார் சீவக. 2660

பூக்கமழ் துகிலுந் தோடு மாலையும் சொரிய சீவக. 2661

பண்ணுரை மகளிர் மாலை பைந்துகில் மாலை
கவர்ந்துகொள்ள சீவக. 2663

கள் செய் மாலையார் கண்கொளாத் துகில் சீவக. 2685

தூநிறத் துகிலின் மூடிப் படலிகை சீவக. 2707

வெண்டுகில் மாலை சாந்தம் விழுக்கலம் சேர்த்தி சீவக. 2734

பொடிப் புகைத் துகிலின் நீக்கி சீவக. 2827

